கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 228/2019

பி.வா.சா.2– சரோஜினி

27–02–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவாவில் சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி என் தகப்பனார் என்பதால் சாட்சியமளிக்க வந்தேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் என் தகப்பனார் பழனிச்சாமி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கே தெரியும். எப்படி தெரியும் என்றால் என் அப்பா எனக்குச் சொன்னார். தாவாச் சொத்தில் இருந்து நான் எவ்வளவு தொலைவில் வசிக்கிறேன் என்றால் 3 கி.மீ. தூரம் இருக்கும்.

2) எனக்கு எப்போது திருமணமானது என்றால் 2006ம் ஆண்டு திருமணமானது. 2006ம் வருடத்தில் இருந்து முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ள முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா தடம் சர்வே எண் 408 புறம்போக்கு தடத்திலிருந்து புல எண் 409/1பி வழியாக செல்கிறது என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். 29.11.1982ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படியும், அதன்பிறகு ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படியும் வாதி தாவாவை நடத்தி வருகிறார் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன்.

3) அம்மணி அம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் பாட்டி. எங்களுக்கும், வாதிக்கும் சொத்துக்களை கொடுப்பதற்கு முன்பு சொத்துக்களை அம்மணியம்மாள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி மற்றும் 1ம் வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரங்களில் தாவா வழிப்பாதை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவின் பத்திரத்தில் மட்டும் உள்ளது. 1ம் வாதியின் பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தை படிக்கவில்லை.

4) ஒரே தேதியில் 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவா பாதை கண்டு எழுதப்பட்டுள்ளது அதை பற்றி தெரியாமல் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி பெயரிலுள்ள வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து விவரத்தில் தாவா பாதையை பற்றி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பிரதிவாதி ஆவணத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது.

5) தாவா தடத்தில் தான் தென்னந்தோப்புக்கு செல்லும் பாதை என்று சொல்கிறீர்களா என்றால் தவறு. முதல் விசாரணை வாக்குமூலத்தின் 5ம் பத்தியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எந்த நேரத்தில் எந்த தேதியில் நடந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி மதியம் 3 மணிக்கு ஆக்கிரமிப்பு செய்ய முயன்றார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு விசாரணை நடந்த விவரங்கள் பற்றி ஆதாரம் எதுவுமில்லை என்றால் விசாரணை நடந்தபோது நான் உடன் இருந்தேன். ஆவணங்கள் இல்லை.

6) 24.08.2019ம் தேதி நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை காவல் துறை விசாரித்தபோது நான் உடன் இல்லை. தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா பாதையை சரிவர பார்வையிட்டு அளக்கவில்லை என்பதால் பிரதிவாதி அதன்பிறகு நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்று பார்வையிட்டு அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டால் தாவா பாதை விவரங்கள் தெரிந்து விடும் என்பதால் பிரதிவாதி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7) காவல் துறையில் கொடுத்த புகாரின் பேரில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தின் பத்தி 8ல் 1ம் வாதிக்கும் எனக்கும் என்ன உறவு எங்களுக்குள் என்ன பிரச்சினை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) அம்மணியம்மாளின் மூலப் பத்திரத்தில் தாவா பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. வேறு வழிப்பாதை உள்ளது. வேறு வழிப்பாதை உள்ளது என்பதை பொறுத்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. அம்மணியம்மாளுக்கு அவருடைய சொத்துக்களை அடைய வேறு பாதை உள்ளது என்பதற்கான ஆவணத்தை படித்துப் பார்த்தீர்களா என்றால் நாச்சம்மாள் வகையறாவிடம் உள்ளது. நாச்சம்மாள் வகையறா பெயரிலுள்ள ஆவணத்தை படித்துப் பார்த்தீர்கள என்றால் படித்துப் பார்த்தேன்.

9) அம்மணியம்மாளுக்கு அவருடைய சொத்தை அடைய வேறு பாதை உள்ளது என்பதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. எங்கள் ஆவணத்தை நான் தாக்கல் செய்ய முடியும். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் அம்மணியம்மாளின் சொத்துக்கு வேறு பாதை இல்லை அதனால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்வதை தவிர்க்கிறேன் என்றால் சரியல்ல.

10) 29.11.1982ம் தேதி பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பாதைர எத்தனை நபர்களுக்கு பாத்தியம் என்றால் 4 நபர்களுக்கு பாத்தியம். அதனால் தாவா வண்டிப்பாதை பொதுப் பாதை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன்படியும் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் படியும் 1ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் பொது பாதை என்ற அடிப்படையில் உரிமை அனுபவம் உள்ளது என்றால் பொதுப் பாதை தான். கந்தசாமிக்கும், கோபால்சாமிக்கும் உள்ள பங்கை என் கணவர் கிரயம் பெற்றுள்ளார். அதனால் பாதை எங்களுக்குப் பாத்தியம்.

11) இந்த விவரங்களை பிரதிவாதியின் எதிர்வழக்குரையிலோ, என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சாட்சியமளிப்பது என் அப்பாவின் வழக்கிற்கா என் கணவர் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்திற்கா என்றால் என் அப்பாவின் வழக்கிற்கு. வா.சா.ஆ.1 மற்றும் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட ஆவணங்களின் படி தாவா பாதை பொதுப் பாதை என்பதால் 1ம் பிரதிவாதி

வாதி தாவா பாதையில் செல்வதை தடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.02.27 15:12:43 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.